ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1926/46 - 2015 අගෝස්තු මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.08.06

*1926/46 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2003*

**2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்துக்கும், ரஷ்ய கூட்டரசு அரசாங்கத்துக்கும் இடையே இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு மே மாதம் இருபத்தியெட்டாம் நாளன்று சென்ற் பீட்டர் ஸ்பேக்கில் செய்யப்பட்ட உடன்படிக்கை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன். இலங்கை அரசாங்கத்துக்கும் பொதுநலவாய நாடொன்றல்லாத ரஷ்ய கூட்டரசு அரசாங்கத்துக்கும் இடையே செய்யப்பட்ட இவ்வுடன்படிக்கை குற்றவியல் கருமங்களில் சட்ட ரீதியான பரஸ்பர உதவியைக் கையாள்கின்றது என்பதுடன், மற்றவற்றுக்கிடையில் தத்தமது நியாயாதிக்கங்களினுள் பயங்கரவாதம் உட்பட, குற்றங்களை எதிர்த்தல் தொடர்பாக ஒத்துழைப்பினூடாக உடன்படிக்கைக்கான இருதிறத்தவர்களினதும் மேம்பாடான பயனுறுதியுடன் சம்பந்தப்பட்டதாகும்.

விஜயதாச ராஜபக்ஷ,
*நீதி அமைச்சர்.*

கொழும்பு,
*2015, யூலை 30.*

*8 - 602*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*